யெல்லாம் அப்போதைக்கப்போது களைந்து நல்லமுறையில் நடத்தினால் எதிர்காலத்தில் இந்த இயக்கம் விரைவில் நன்றாக முன்னேறும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு இந்த நம்பிக்கை எல்லோருக்கும் இருப்பதால் இந்த மான்யத்திற்கு எதிராக வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கும் நண்பர்கள் எல்லாம் இந்தக் கொள்கையில் எங்களோடு இணைந்திருப்பதால் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முனபுள்ள கேள்வி: ''கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,97,18,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்''.

கோரிக்கை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்குமுன்னால் அறிவிப்பு ஒன்றுள்ளது.

சட்டமேலவையின் மாண்புமிகு சேர்மன் அவர்களிடமிருந்து ஒரு செய்தி வந்துள்ளது என்பதை இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன். செய்திபாவது—

1967-ம் வருடம் ஜூன் மாதம் 27-ம் தேதியில் மேலவையில் கீழ்கண்ட திருத்தங்களுடன் மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா, 1967 [District Municipalities (Amendment Bill) 1967] நிறைவேற்றப்பட்டு, கையொப்பமிடப் பட்டு பேரவையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது :—

திருத்தங்கள்.

' In clause 2, in new sub-section (5-A)' add the following proviso—

" Provided that before publishing a notification under this sub-section, the State Government shall publish in the *Fort St. George Gazette* a notice specifying the grounds on which they propose to publish such notification, fix a period of not less than four weeks for any person interested to show cause against the proposal and consider the objections, if any. "

இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை நாளை 1967-ம் வருடம் ஜூன் மாதம் 30-ந் தேதி காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Satutory Rules and orders.

*209. Notification issued with G.O. Ms. No. 494, Home, dated the 17th February 1967, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, the vehicle MSR 5544 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Government General Hospital, Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931].